PHONE No. 85030

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 146

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF THE D.P.F.

சென்னை: கார்த்திகை 16உ. செவ்வாய் (1—12—53) ☆ ☆ ☆ வெளியீடு: கார்த்திகை 17உ. புதன் (2—12—53)

'திராவிட நாடு' குறித்து பெரியாரிடம் வாதிட சி. ஆர்.-க்கு அறைகூவல்!

கடல் ஒலியை அஞ்சச் செய்த சென்னை மக்கள் வாழ்த்தொலி!

'வெள்ளம் போல் தமிழர் கூட்டம்! வீரங்கொள் கூட்டம்!'

பாராட்டத்தகுந்த தி.மு.க. தொண்டர்படை அணிவகுப்பு

லட்சக் கணக்கில் திராவிடர் திரண்டு தலைவர்களைப் பாராட்டிய காட்சி

ஆயிரக்கணக்கான பெண்கள் பங்கு கொண்டனர்

சென்னை, டிச. —

சரித்திரம் காணாத வகையில் சென்னை திருவல்லிக்கேணி கடற்கரையில் நேற்று மாலை அமைந்திருந்த காட்சி, எவர் உள்ளத்தையும் தொடாதிருக்க இயலாது. சமுத்திரமா அல்லது ஜனத்திரளா என சந்தேகிக்கும் வகையில், எப்பக்கம் திரும்பினாலும், திராவிடப் பெருங்குடி மக்கள் திரண்டிருந்த காட்சியை எவராலும் வர்ணிக்க இயலாததாயிருந்தது. பஞ்சுக் குவியல் போன்ற கடலலைகளினின்றும் தெறிக்கும் நீர்த் திவலைகள் மேடையிலிருந்த தலைவர்களுக்குப் பன்னீர் தெளிப்பதைப்போல தெளிக்கும் வகையில் மேடை, கடலையொட்டி அமைக்கப்பட்டிருந்தது. கண்களைப் பறிக்கும் பாதரச விளக்குகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. வெள்ளி மண்டபமென அமைக்கப்பட்டிருந்த அந்தப் பிரம்மாண்டமான மேடைத் தோற்றம் இதயத்தில் இன்ப ஒளியைப் பாய்ச்ச ஒருபோதும் தவறியிருக்காது.

மேடைக்கருகில் அமைக்கப்பட்டிருந்த பிரத்தியேகமான இடத்தில் மாவட்டங்களின் சார்பாக வந்திருந்த மாவட்டச் செயலாளர்கள், கழகச் செயல் வீரர்கள், பேச்சாளர்கள், நடிகர்கள், பத்திரிகை நிருபர்கள் அனைவரும் அமர்ந்திருந்தனர். பெண்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த தனி இடத்தில் தாய்மார்கள் குழுமியிருந்தது தனிப்பெரும் காட்சியாக அமைந்திருந்தது.

சிறை வீரர்களை வரவேற்பதைப் போல கழகக்கொடி அசைந்தாடிக் கொண்டிருந்தது.

தலைவர்கள் மேடைக்கு வருமுன் அதிர்வேட்டுகள் முழங்கின.

தலைவர்கள் மேடைக்கு வருவதற்கென அமைத்திருந்த வழி இருக்கிறதே, அது ஒன்றே போதும், தி.மு. கழக அமைப்பு முறையின் பெருமையை விளக்க. பொதுச் செயலாளர் அண்ணாதுரையும், மற்றவர்களும் மேடைக்கு வர, அந்தப் பாதையில் நுழையும்போது, ஆர்வமிகுதியால் குழுமியிருந்த பொதுமக்கள் ஆரவாரம் செய்துகொண்டு எழுந்த போது, பாதையின் நெடுகலும் அணிவகுத்திருந்த தொண்டர் படை சங்கிலித்தொடரென கைகோர்த்து, தலைவர்களை மேடைக்கு வழிவிட்டமுறை என்றென்றும் மறக்கமுடியாத நற்பணியாகும்.

பொதுச் செயலாளர் அண்ணாதுரை, நெடுஞ்செழியன், சம்பத், நடராசன், மு. கருணாநிதி ஆகியோர் மேடைமீது முன்வரிசையில் பொதுமக்களுக்கு தெரியும்வகையில அமர்ந்திருந்தனர். கூட்டம் 6 மணிக்குத் துவங்கியது.

திராவிடத்தின் நல் வாழ்வுக்குப் போராடி சிறைசென்று மீண்ட தலைவர்களை சென்னை மாவட்ட தி.மு. கழக சார்பாக வரவேற்பதாகக் கூறி அவர்

(3-ம் பக்கம் பார்க்க)

சென்னை, டிச. 1—

மூன்றுமாத சிறைதண்டனை அனுபவித்து வெளி வந்துள்ள தி. மு. கழகப் பொதுச் செயலாளருக்கும், மற்றும் தோழர்கள் நெடுஞ்செழியன், சம்பத், நடராசன் ஆகியோருக்கும் நேற்று மாலை திருவல்லிக்கேணி கடற்கரையில் ஓர் மாபெரும் வரவேற்பு நடைபெற்றது. தி. மு. கழகத் தலைமை நிலைய பொறுப்பாளர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., முன்மொழிய, 'நம் நாடு' பொறுப்பாளர் அ. பொன்னம்பலனார் வழிமொழிய, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் கே.எம். கண்ணபிரான் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

தோழர் கண்ணபிரான் தனது தலைமை உரையில்,

'எங்களை சிறைக்கனுப்புவது பேராபத்தை வலிய விலைக்கு வாங்குவதாகும்'

"நாங்கள் "காட்டுமிராண்டிகள்" தான்! 'நாகரிக' நேரு பண்டிதர் எங்களை விட்டு நீங்கட்டும்!"

சென்னை மக்கள் வரவேற்பில் பொதுச் செயலாளர்

அண்ணாதுரை அறிவுரை

"சிறைக்குள்ளே எங்களைத் தள்ளி விடுவதன் மூலம், எங்கள் லட்சியத்தை மக்கள் மன்றத்திலிருந்து மறைத்துவிட முடியாது! உலைக்கூடத்திலே கொல்லன், இரும்புத் துண்டைப் பழுக்கக் காய்ச்சி, சம்மட்டியால் அடித்தடித்து, கூர்முனை ஈட்டிகளை எவ்வாறு உருவாக்குகிறானோ, அதைப்போன்றேதான், ஆட்சியாளரும எங்களைச் சிறைக்கனுப்பி, கூரிய ஈட்டிகளாக்குகின்றனர். ஒவ்வொரு முறையும் சிறைசென்று மீண்டு வரும்போது, நாங்கள், ஈட்டி முனையைக் காட்டிலும் அதிகக் கூர்முனை உள்ளவர்களாக மாறி வருகிறோம். அவ்வாறு கூர்மையாக்கப்பட்ட கூர்வேல்கள் உங்களிடம் தரப்படுகிறது. அவைகளைச் சிறந்த முறையில் தக்க விதத்தில் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது, உங்கள் பொறுப்பு. அரசியல்வாதிகளை சிறைக்கு அனுப்புவது, ஆபத்தை விலைக்குவாங்க அச்சாரம் கொடுப்பதைப் போன்றதாகும்."

(3-ம் பக்கம் பார்க்கவும்)

"நீங்கள் எங்களை வரவேற்கிறீர்கள்! ஆனால் வழியனுப்பத் தயாராயிருக்கிறார் சி. ஆர்."

—(0)—

சிந்தை குழம்பிய விந்தையான மனிதர் ஆச்சாரியார்!

கருப்புக்கொடி காட்டுவது காட்டுமிராண்டித்தனம் என்றால் ரயிலைக்கவிழ்த்ததா?

தி. மு. கழக துணைச்செயலாளர் நெடுஞ்செழியன் முழக்கம்

"ரோஜாவை என்ன பெயரிட்டழைத்தாலும் அதன் மணம் மாறாது; அதுபோலத்தான், தி. மு. கழகத்தை, யார் யார் என்ன பெயரிட்டழைத்தாலும் அதன் கண்ணியம் குன்றாது—கட்டுப்பாடு தளராது."

"நீங்கள், எங்களை வரவேற்கிறீர்கள்; ஆனால், ஆச்சாரியாரோ, எங்களை வழியனுப்பத் தயாராக இருக்கிறார்; இதை நாங்கள் நன்கு உணர்கிறோம்."

என்று, நேற்று மாலை சென்னை கடற்கரையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில், தோழர் நெடுஞ்செழியன் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசியதாவது:—

"அண்ணா வாயிலிருந்து உதிரும் சொற்களால், நடைபெறுவதெல்லாம் இந்த நாட்டில் நடைபெறுகிறதென இந்த சர்க்கார் இப்போதுதான் அறிந்துகொண்டது. திரளாக கூடியிருக்கும் இப்பேர்ப்பட்ட மக்கள் சக்தியைத்தான் பண்டித நேரு 'காட்டுமிராண்டிகள்' என்று கூறிவிட்டுப் போய்விட்டார் காரணம், அவர் பேசிய இடம் 'விளையாட்டு' மைதானம்!

எழுதினால், பேசினால், கேட்காத சர்க்காரிடம்,—தூதனுப்பினால், முறையிட்டால் கேட்காத சர்க்காரிடம்—கருப்புக் கொடி காட்டி, அதிருப்தியை காட்டாமல் என்ன செய்வது? அமைதியான முறையில் கருப்புக் கொடி காட்டுவது காட்டுமிராண்டித்தனமென்

(3-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 1—12—1953 செவ்வாய்

‘என் வாழ்நாளில் நான் பெருமகிழ்ச்சி கொண்ட இரு சந்தர்ப்பங்கள்!’

‘ஒன்றுக்குக் காரணம் எனது மனைவி! மற்றொன்றுக்குக் காரணம் ஆச்சாரியார்!’

‘நிபுணர் குழுவின் நாட்டுப்பற்றில் நம்பிக்கையில்லை’

‘திராவிட நாடு திராவிடருக்கே’ என்று கூறியவண்ணம் மட்டற்ற மகிழ்ச்சியோடு மரணத்தைத் தழுவுவேன்!’

சங்கநாதம்!

மூன்று திங்களாக இருள் சூழ்ந்து கிடந்த திராவிட வானம் நேற்றுக் காலையில் இருந்து மீண்டும் ஒளிவீசத் தொடங்கி இருக்கிறது. எழு ஞாயிறுபோன்று பொதுச் செயலாளர் அண்ணாதுரை மீண்டும் திராவிடத்துக்கு அறிவொளி வீச, தம் அரும் தம்பிமார்களுடன் சிறையில் இருந்து வெளி வந்துவிட்டார்.

சிறையில் தள்ளப்பட்டவர்களை விடுதலை செய்வது வழக்கமாகக் காலை எட்டு மணிக்குத்தான். அதற்கு முன்பாக சிறைக் கதவுகள் திறக்கப்படுவது சட்டத்திற்குப் புறம்பானது என்று கூறுவதற்கு இல்லையானாலும், மரபுக்கு மாறானது என்பதில் ஐயமில்லை.

காலை ஒன்பது மணிக்குத்தான் பொதுச்செயலாளர் தனது தம்பிமார் மூவருடன் வெளிவருவார் என்று, அவர்களைப் பாராட்டி வரவேற்க சென்னை நகர தி. மு. கழகம் ஏற்பாடு செய்திருந்தது. பல்லாயிரக் கணக்கான திராவிடப் பெருங்குடி மக்கள், தங்கள் குலத் தலைவரைக் கண்டு களித்து உள்ளம் திறந்து, வாய் நிறைந்த வாழ்த்துக் கூறுவதில அமைச்சர் ஆச்சாரியாருக்கு விருப்பமில்லை. எனவே, வழக்கத்திற்கும், எதிர்பார்த்ததற்கும் மாறாக, விடியற்காலையே, அதாவது காலை ஆறு மணிக்கே தலைவர்களை வெளியில்விட சர்க்கார் முனைந்துவிட்டது. மழை நின்றும் தூவானம் விடவில்லை என்பார்களே அதுபோலவே, இந்தச் சாதாரண விஷயத்தில்கூட ஆச்சாரியார் சர்க்காருக்குப் பெரும் புத்தி இல்லாமற் போனது வருந்தத்தக்கதாகும்.

‘அமைதி—ஒழுங்கு’ என்று எதற்கும் சர்க்கார் புகலாகக் கூறுவது போலவே, இந்த விரும்பத் தகாத, தனி நபர்களுக்குள்ள அடிப்படை உரிமையைப் புறக்கணிக்கிற இந்த அளவு கடந்த செயலுக்கும் சர்க்கார் புகலாகக் கூறும் என்பது நமக்குத் தெரியும். இருந்தாலும் மாற்றார் செய்யுங் கெடுதியும் சில சந்தர்ப்பங்களில், எதிர்பாரா வகையில், குறிப்பிட்டவர்களுக்குச் சாதகமாக முடிவதும் உண்டு.

ஞாயிறு, காலையில் தானே எழும்; எனவே, ஞாயிறு போன்று பொது வாழ்வில் உள்ளவர்களும், விடியலில் வெளி வருவதுதான் நியாயம் என்று அமைச்சர் ஆச்சாரியார் எண்ணித்தான், நமது தலைவர்களை, காலை 6-மணிக்கே விடுதலை செய்தார் என்று உயர்ந்த முறையில் கொள்ளுவோமாக! நிற்க,

மாலை, பாராட்டுக் கூட்டம் சென்னை கடற்கரையில் டாக்டர் நாயர் கட்டத்தில் கூடியது. சென்னை பதினைந்து லட்சம் மக்கட் தொகையில் பருவமடைந்த இளங்காளைகள் அனைவரும் கூட்டத்தில் குழுமி இருந்தனர் என்று சொல்வதே பொருத்தமுடையதாகும். இப்படிக் கூறுவதினால் முதியவர்கள் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்று சொல்வது ஆகாது. பெண்களும் ஆயிரக் கணக்கில் திரண்டிருந்தனர். லட்சக் கணக்கான இம்மக்கள் ஓரிடத்தில் அமைதியாகக் குந்தி, தலைவர்களைக் கண்ணாரக் கண்டும், தலைவர்களின் அறிவுரையை மாந்தியும், உளம் பூரித்து புத்தார்வம் பெறவும் மிகச் சிறந்த முறையில் இடம் ஒதுக்கப்பட்டு இருந்தது. இவ்வளவிற்கும் காரணமாக இருந்த சென்னை மாவட்டத் தி. மு. கழகத் தோழர்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

பெருங் கூட்டத்தின் கிழக் கோடியில் கரையில்லாக் கடலை ஒட்டி சொற்செல்வர்களின் சொற்பொழிவு மேடை அமைக்கப்பட்டு இருந்தது, மேடையின் உச்சியில்—உயரத்தில் நமது தி. மு. கழக தியாகத்தின் சின்னமாக விளங்கும் இருவண்ணக் கொடி காற்றில் கம்பீரமாக மிதந்து கொண்டு இருந்தது. அதனடியில் இருந்த மேடையை, விளக்கிக் காட்டிக் கொண்டு இருந்தது. பலவண்ண ரச மின்சார விளக்குகள். திராவிடச் செல்வங்கள் மேடைமீது வீற்றிருந்தக் காட்சி, கண்கொள்ளாக் காட்சியாகவே இருந்தது,

ஆச்சாரியாரின் விரிவிலா நெஞ்சில் தோன்றிய எரிவைத் தணிக்க, நமது தலைவர்கள் சிறை புகுந்த முன்னாள், அதே இடத்தில், அதே நேரத்தில், அதே மக்கள் முன்னிலையில் ஆகஸ்டில் பருகிய காட்சியைவிட, இரட்டிப்பான சுவை விருந்தை நேற்று சென்னை மக்கள் பருகி இறும்பூதெய்தினர் எனக் கூறுவது மிகையாகாது இந்தக் காட்சியை அமைச்சர் ஆச்சாரியார் நினைத்துப் பார்த்தாலே போதும், அவர் ஆவி, அவர் உடலை விட்டு நீங்கி மறைந்துவிடும்!

ஒலி பெருக்கியும், விளக்கொளியும் உயர்ந்த முறையில் அமைத்து, திராவிடத்தின் இதயக் குரலை திராவிட மக்களும், காங்கிரஸ் ஆட்சியாளர்களும் உணருமாறு செய்த ஊழியர்களையும் நாம் பாராட்டுகிறோம்.

‘அமைதி—ஒழுங்கு’ காப்பாற்ற போலீஸ் ஏற்பாடும் நல்ல முறையிலேயே இருந்தது. அந்தப் போலீஸ் படை காங்கிரஸ் அமைச்சர் கூட்டத்திற்கும் பாதுகாப்புப் படையாக இருந்து இருக்கிறது. அக் கூட்டங்களில் திரண்டிருந்த மக்களின் தொகையையும், நேற்றைய கூட்டத்தில் குவிந்திருந்த மக்களின் தொகையையும் அப்போலீஸ் படையினர் நன்றாகக் கண்டுதான் இருப்பர். அவர்கள் என்ன எண்ணி இருப்பர்?

சட்டத்துக்குக் கட்டுப்பட்டு, அவர்கள், அதை, வெளியில்கூற முன்வராமல் போனாலும், உள்ளத்தில் கூடவா உரை போட்டுப் பார்க்காமல இருந்திருப்பார்கள்? கடமையைச் செய்த அவர்களையும் திராவிடர்கள் மறக்க முடியாது.

காட்சி கண்ணுக்கு விருந்தென்றால், தலைவர்களின் சொல் சங்கநாதமாக இருந்தது.

பாராட்டுக் கூட்டத்தில் ஈ. வெ. கி. சம்பத் இடி முழக்கம்

“தாயகத்தின் விடுதலைப் போரிலே ஈடுபடும் நாங்கள் தாயக மக்களால்—பெரும் அளவிலே மகத்தான முறையிலே வரவேற்கப்படுவதை எண்ணும்போது, நாளை காலை 5 மணிக்கு, எனக்கு தூக்குமேடைதான் என்று தீர்ப்பு தரப்படுமானால்,—கழுத்தைக் கயிற்றினுள் நுழைக்குமுன்—“திராவிட நாடு திராவிடருக்கே” என்ற இலட்சிய முழக்கத்தை கடைசிமுறையாக எழுப்பிவிட்டு, மட்டற்ற மகிழ்வோடு மரணத்தைத் தழுவுவேன்.”

“அண்ணாவிற்குப் பின்னால் உள்ள இம்மாபெரும் மக்கள் சக்தியை ஒழித்துக் கட்ட நினைப்பவர்கள், சரித்திரத்தில் வந்து போன 1000 கோணங்கிகளோடு, 1001-வது கோணங்கியாகச் சேர்க்கப்பட வேண்டியவர்தான்.”

“தாசர் புத்தி தலைக்கேறிய காரணத்தால், கல்வித் திட்ட நிபுணர் குழு, ஆச்சாரியார் கல்வித் திட்டத்திற்கு, ‘ததாஸ்து’ பாடிவிட்டது. நிபுணர் குழுவின் அறிவு ஆற்றலைப் பற்றி இல்லாவிட்டாலும், அவர்களுடைய நாட்டுப் பற்றில் எங்களுக்குச் சந்தேகமிருக்கிறது; ஆகவே, அந்தக் குழு தந்த திட்டத்தின தீர்ப்பை, நாங்கள் காலடியில போட்டு மிதிக்கிறோம்.”

என்று, சென்னை கடற்கரை வரவேற்புக் கூட்டத்தில், தோழர் ஈ. வெ. கி. சம்பத் முழங்கினார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

“நான் இப்பேர்ப்பட்ட மகிழ்ச்சி அடைந்தது இரண்டாவது முறை. ஏழாண்டுகளுக்கு முன் நான் ஒரு அழகியை மணந்தேன்; அதுதான் என் முதல் பெரு மகிழ்ச்சி. அன்றைய மகிழ்ச்சிக்குக் காரணம் அந்தப் பெண்; இன்றைய மகிழ்ச்சிக்குக் காரணம் ஆச்சாரியார்!

ஆச்சாரியார், அண்ணாவையும், கழகப் பேச்சாளர்களையும் சிறைக்குள் தள்ளிவிட்டு நாட்டிலே பவனி வந்தார்; ஆனால், அவர்போன இடமெல்லாம எதைக் கண்டார்? மக்களின் கோபக் கனலைக் கண்டார்—‘ஆச்சாரியே, திரும்பிப் போ,’ என்ற எதிர்ப்புக் குரலைத்தான் அவரால் கேட்க முடிந்தது,

‘‘சிலர் என்னை போகச் சொல்கிறார்கள் — என் மனக் குரங்கு, நீ போகாதே’ என்கிறது என ஆச்சாரியார் கூறுகிறார். அதன் பலனை ஆச்சாரியார் விரைவில் உணர்வார்.”

அமெரிக்க பத்திரிகைகளின் கதவடைப்பு!

புகைப்பட செதுக்கி ஊழியர்களின் வேலை நிறுத்தமே காரணம்

நியூயார்க், நவ. 30—

“புகைப்பட செதுக்கி ஊழியர்கள் கீழ் குறிப்பிட்டப் பத்திரிகாலயங்களுக்கு முன்னால நின்று மறியல் செய்து வருகின்றனர்.”

“இதன் விளைவாக ஆறு பத்திரிகைகள் பிரசுரிக்க முடியாமல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.’

கடந்த இரண்டு நாட்களாக, அமெரிக்க நியூயார்க் மக்கள் வானொலி மூலமாகவே உலகச் செய்திகளை அறிந்து வருகின்றனர்.

நியூயார்க் டைம்ஸ், டெய்லி நியூஸ், டெய்லி மிரர், நியூயார்க் வொர்ல்ட் டெலிகிராம், ஜர்னல் அமெரிக்கன், நியூயார்க்போஸ்ட் ஆகிய ஐந்து பத்திரிகைகளும் இரண்டு நாட்களாக வெளியிடப்பெறாமல் நிறுத்தப்பட்டு இருக்கின்றன.

இந்தப் பத்திரிகை நிலையங்களில் வேலை செய்யும் புகைப்பட செதுக்கி ஊழியர்களுக்கும் பத்திரிகை உரிமையாளர்களுக்கும் ஏற்பட்டுள்ள சம்பளத்தகராறே, ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்குக் காரணம் என்று சொல்லப்படுகிறது. ஞாயிற்றுக் கிழமைகளில் வெளிவரும் பத்திரிகைகளில் இரண்டொன்று, நேற்று காலை மறியல் தொடங்கப்படுவதற்கு முன்னதாகவே, ஞாயிறு வெளியீடுகளை வெளியிட்டன. ஜர்னல் அமெரிக்கன் என்ற இதழ் ஒரு பதிப்பை மட்டும் நேற்று வெளியிட்டது.

இந்த வேலை நிறுத்தத்தால் பாதிக்கப்படாத ஹெரால்ட் டிரிபியூன்’ 8 பக்கம் கொண்ட 20 லட்சம் பிரதிகளை திங்கள் காலை வெளியிட்டது. அதனுடைய சராசரி தினசரிப் பிரதி 3,60,000 யாகும்.

பெரியார் உடல் நிலை: ஆச்சாரியார் கவலை

சென்னை, நவ. 30—

திராவிட கழகத் தலைவர் பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் உடல் நலம் குன்றி சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது குறித்து, ஆச்சாரியார் டெலிபோன் மூலமாக ஆஸ்பத்திரி அதிகாரிகளை விசாரித்தார்.

பெஸ்ட் அண்டு கம்பெனி ஆள் குறைப்பு

சென்னை. நவ. 30—

சென்னை மெர்க்கன்டைல் யூனியன் பெடரேஷன் ஆதரவில் இன்று மாலை கோகலே மண்டபத்தில் எஸ். சி. சி. அந்தோணி பிள்ளை எம் எல். ஏ. தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

சென்னை பெஸ்ட் அண்டு கம்பெனியார், கம்பெனியிலுள்ள 93 சிப்பந்திகளை வேலையிலிருந்து நீக்கியதைக் கண்டிக்கவே இக்கூட்டம் கூட்டப்பட்டது

சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜி. கண்ணன் பேசுகையில், பெஸ்ட் அண்டு கம்பெனி சிப்பந்திகள் 93 பேருக்கு சனிக்கிழமை அன்று திடீரென்று ‘நோட்டீஸ்’ கொடுக்கப்பட்டிருக்கிறது; 7 கம்பெனியைச் சார்ந்த சிப்பந்திகளும், தொழிலாளர்களும் சேர்ந்ததே நமது சங்கம்,” என்றார்.

மூர் மார்க்கெட் தொழிலாளர் வழக்கில் தீர்ப்பு

சென்னை, நவ. 30—

ஆயிரம் விளக்கு தொகுதி எம். எல். ஏ., தோழர் ஜே. சிவசண்முகம் (சபாநாயகர்) அவர்களிடம் சென்று குறைகளைச் சொல்லச் சென்று ஒப்பாரி வைத்து அழுத நிகழ்ச்சி சம்பந்தமாய் போலீசார் மூர் மார்க்கெட் தொழிலாளர் மீது தொடர்ந்த வழக்கில் சென்னை 5-வது மாகாண மாஜிஸ்திரேட் அவர்கள் 8—12—53 அன்று தீர்ப்பு கூறுவார்.

கடல் ஒலியை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு வரவேற்பிதழை வாசித்தளித்தார்.

பின்னர் ஒவ்வொரு மாவட்டங்கள் சார்பாகவும் தலைவர்களுக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டன.

செங்கற்பட்டு மாவட்ட செயலாளர் சி.வி.எம். அண்ணாமலை செங்கற்பட்டு மாவட்டத்தின் சார்பாக தலைவர்களை வரவேற்பதாகக் கூறி மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

அதன்பின் வட்டக் கிளைக் கழகங்கள் சார்பாகவும், கல்லூரி மாணவர்கள் சார்பாகவும், 'நம் நாடு' அலுவலகத்தின் சார்பாகவும் தலைவர்களுக்கு மலர்மாலை சூட்டப்பட்டன.

★

என். வி. நடராசன்

பின்னர், தோழர் என். வி. நடராசன் பேசுகையில், "தோழர் ஆச்சாரியார் தி.மு. கழகத்தை ஒழித்துக்கட்டி அதை சரித்திரத்தில் எழுதிவிட வேண்டுமென்று கூறியிருக்கிறார். உள்ளபடியே அப்பேர்ப்பட்ட நிலை ஏற்பட்டால், திராவிடத்திலே, வடநாட்டு ஆதிக்கம் ஒழிந்தது; ஜாதிவெறி ஒழிந்தது என்றுதான் அர்த்தம்," என்றார்.

நெடுஞ்செழியன் பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ருல், 1942-ல், ரயிலைக் கவிழ்த்து, தண்டவாளத்தைப் பெயர்த்து, அதிகாரிகள் முகத்தில் திராவகத்தை ஊற்றிய காங்கிரசாரின் செய்கைக்கு என்ன பெயரிட்டு அழைப்பது?

எந்த ஆச்சாரியார், 'நானா அவர்களைச் சிறைக்கனுப்பினேன்?' என்று சொன்னாரோ, அதே ஆச்சாரியார் தான், எங்களுக்குத் தண்டனை போதாதென்று அப்பீல் செய்துள்ளார். ஒரு இடத்தில், தி. மு. கழகம், 'எறும்பு' என்கிறார்—மற்றொரு இடத்தில், நாமும 'எறும்பைப்' போல சுறுசுறுப்பாக இருக்க வேண்டுமென்கிறார்! ஒரு நிலை நின்று அவர் பேசாதது, விந்தையாகத்தான் இருக்கிறது."

(5-ம் கலத்தின் தொடர்ச்சி)

யாக இருக்கவேண்டுமே யல்லாது, அடுத்த வீட்டுக்காரனுக்கு அல்ல.

"கோரியாவிலே நடத்தப்பட்டதாகச் சொல்லப்படும் கிருமி யுத்தத்தைக் கண்டிப்பதாலேயே, இந்நாட்டு மக்களின் பசியும், பஞ்சமும், பட்டினியும் போய்விடுமென எண்ணும் கம்யூனிஸ்டு நண்பர்கள்தான் நமது போராட்டங்கள் தேவையல்ல என்று சொல்ல ஆரம்பித்துள்ளனர். அவர்களை நான் அறிவற்றவர்கள் என்றுசொல்ல மாட்டேன். அறிவை மறந்தவர்கள் என்கிறேன் — அவர்கள், அதைப் பொறுத்துக் கொள்வார்கள் என்ற காரணத்தால்!

தூத்துக்குடி சதி வழக்கிற்கு இன்னும் ரூ. 14 000 தேவை என்றும், ரூ. 14,000-ம் பொதுமக்களே தந்தால்தான் ஆச்சாரியார் சர்க்காருக்குப் பாடம் கற்பித்தவர்களாவோம்" என்றும் இறுதியில் குறிப்பிட்டார்.

திருச்சி, கருணாநிதி வரவேற்புக் கூட்டம்

சென்னையில் அண்ணாதுரை அறிவுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"நான் ஒன்றுமட்டும் கூறுவேன்; காட்டுமிராண்டிகள் எதையும் செய்யமாட்டார்கள்; ஆனால், ஒரு காரியத்தைத் தொடங்கி விட்டால், தலைபோனாலும் விடமாட்டார்கள்; எனவே, காட்டுமிராண்டிகளை ஆள, நாகரீக மனிதர் என்று சொல்லிக் கொள்ளும் நேரு, இனி நமக்குத் தேவையில்லை."

"சர்ச்சில் ஒருமுறை காந்தியாரை அரை நிர்வாண பக்கிரி என்றார்; ஆனால், அதே அரை நிர்வாணப் பக்கிரியிடம், எவ்விதம் நாட்டை ஒப்படைக்கும் நிலை வெள்ளையருக்கு ஏற்பட்டதோ, அதேபோல, 'காட்டுமிராண்டிகளான' நம்மிடம் நேருநாட்டை ஒப்படைக்குமுன் நாம் இறந்துவிட மாட்டோம்."

"நாகரீகமிக்கவர்கள்—பதவி பித்துப் பிடித்தவர்கள்—எம். எல். ஏ., பதவி கிடைத்தால் போதுமென்று இருந்துவிடுவார்கள்; ஆனால், 'காட்டுமிராண்டிகள்' அப்படியல்ல-துணிந்துவிட்டால் உயிரையே பணயம் வைத்துப் போராடுவோர்கள்."

"திராவிடநாடு பிரிவினை குறித்து வாதாட ஆச்சாரியாருக்கு வக்கிருந்தால, வரலாறு அவருக்கு வழி காட்டினால், பூகோளம் புள்ளி விபரம் காட்டினால், பலத்த போலீஸ் பந்தோபஸ்தோடு, திராவிடநாடு பிரிவினை கூடாதென்று அவர் பேசட்டும்—அவருடன் வாதாட நான் வேண்டாம் — வயதில், நான் அவருக்குப் பேரனாயிருப்பேன் என்று அவர் எண்ணக் கூடும பெரியார் ராமசாமியோடு வாதாடிப் பார்க்கட்டும, நிலைமை விளங்கிவிடும்."

—என்று, பொதுச் செயலாளர் சி. என். அண்ணாதுரை, சென்னை கடற்கரை வரவேற்புக் கூட்டத்தில் முழங்கினார்.

"இங்கே கூடியிருக்கும் லட்சோப லட்சம் மக்களும், நாமும், இந்த வரவேற்புக் கூட்டத்திலே எந்த அளவு நம்பிக்கையும், உற்சாகமும் அடைகிறோமோ அந்த அளவுக்கு மாற்றுக் கட்சியினரும், ஆட்சிப் பீடத்தாரும், மன மருட்சியும், பொறாமையும அடைவர்.

"நாங்கள் சிறையிலிருந்த போது திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கையினையும, லட்சியத்தையும் பரப்பப் பணி புரிந்தவர்களுக்கும், உறுப்பினர் பலரைச் சேர்த்து உறுதியுடன் உழைத்த கிளைக் கழகங்கட்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்; அவர்களைப் பாராட்டுகிறேன்.

"ஆச்சாரியார் நினைத்தார்—கழகத்தின் முக்கியஸ்தர்களை சிறையில்அடைத்துவிட்டால். தி. மு. கழகம் அழிந்துவிடுமென்று! 'வீணையை ஒளித்து வைத்துவிட்டால் இசை ஒலிக்காது—அல்ல-அல்ல, சீப்பை ஒளித்து வைத்து விட்டால் திருமணம் நடைபெறாது' என அவர் தப்புக்கணக்கு போட்டு விட்டார்.

"நாங்கள் அரசியல்தந்திரத்தைக் கையாள முற்பட்டிருந்தால், இரகசிய ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருந்தால் 10 நாட்களில் ஆச்சாரியார் சர்க்காரை நீக்க முடியும். டாக்டர் வரதராஜலுவை சந்திக்கத் தெரியாதா? காமராஜருக்குக் கடிதம் போடத் தெரியாதா? 'தி. மு. கழகம், உங்களுக்கு ஒரு தீங்கும் செய்யாது; இரண்டாண்டுகள் உங்களை தி. மு. கழகம் ஆதரிக்கும்' என்று ஒரு வார்த்தை சொன்னால போதுமே, எண்ணிப் பத்து நாட்களில் ஆச்சாரியாரை நீக்க முடியும். ஆனால் அரசியலிலே தி. மு. கழகம் நாணயமற்ற செயலையும், ஈனத்தனத்தையும் கையாளாது; என்றைக்கிருந்தாலும் தி. மு. கழகம் எப்படியும இந்த நாட்டை ஆளத்தான் போகிறது.

அரசியலிலே எனக்குத் தலைவர் பெரியார்; ஆச்சாரியார், எங்களுக்கு மக்களுடைய ஆதரவைப் பெருக்கித்தருவதால், அவர், எங்களுக்கு மறைமுகமான உதவி செய்கிறாரோ என்றுதான் சந்தேகிக்கிறேன். எனவே, அரசியலிலே ஆச்சாரியார் என் நண்பர். காங்கிரஸ் கட்சியிலே ஆளும் தகுதியுடையவர்கள் இல்லை என்ற முடிவுக்கு ஆச்சாரியார் வந்துவிட்டதால், தி. மு. கழகத்தினிடம் ஆட்சியை ஒப்படைக்க எண்ணி, நமக்கெல்லாம் சிறைப் பயிற்சி அளிக்கிறாரோ என்னவோ!

"சிறைச்சாலை, எங்களுக்கு ஒரு கோடைகாலப் பள்ளியாகவே இருந்தது. சிறைக்குள்ளே நான் எண்ணிப் பார்க்காமலில்லை—'நாம் கொண்டுள்ள லட்சியம், உள்ளடக்கிக் கொண்டிருக்கும் மகத்தான கொள்கைகள், லட்சியத்தை ஈடேற்ற நாம் கையாளும் நடைமுறை— இவையெல்லாம் தவறானவையா?—பல்லாயிரம் தடவை சிந்தித்தேன்; வரலாற்று ஆசிரியர்களைத் துணைக்கழைத்தேன்; சரித்திர உண்மைகளை சாட்சி சொல்லச் செய்தேன்—அவையெல்லாம், 'நாம் தவறு செய்யவில்லை,' எனச் சான்று பகருகின்றன.

"நம்மைக் கண்டால் பிடிக்காதவர்கள், நம்மை, 'கண்ணீர்த் துளிகள்' என்றழைத்தார்கள். நான், உங்களையெல்லாம், நமது மாநில மாநாட்டிலே, 'கண்ணீர்த் துளிகளே' என்றே அழைத்தேன். அதைப்போன்றே, நேரு பண்டிதர் நம்மையெல்லாம் 'காட்டுமிராண்டி'கள் என்றழைத்தார். நானும் இனி உங்களை, 'காட்டுமிராண்டிகளே—காட்டுமிராண்டிகளே' என்றே அழைக்கிறேன்.

"வெறியன் என்று கருதப்படுகிற சிம்மன் ரீ, நேரு பண்டிதரை, 'குரங்குப் புத்தியுள்ளவர்' என்றான்; நான், அப்படிக் கூறமாட்டேன் — நேருவின் மீதுள்ள அன்பினாலல்ல;—தமிழின்பால் நான் வைத்துள்ள பற்றுதலால்; ஆனால், அந்தச் சிம்மன் ரீயை. வெறியன் என்கிற நண்பர்கள், நம்மை 'காட்டுமிராண்டி'கள் என்று கூறுகிற நேருவை என்ன சொல்கிறார்களோ, தெரியவில்லை.

"நேரு பண்டிதர் இந்தோனேஷியாவுக்குச் சென்றார். அங்கு நேருவின் கொள்கைகளைப் பிடிக்காத சிலர், அவருக்குக் கருப்புக்கொடி காட்டினார்கள். நேரு, அவர்களைக் காட்டுமிராண்டிகள் என்று சொன்னாரா? சொன்னால் தான் சும்மா இருப்பார்களா, அந்நாட்டு மக்கள்? நம்மை, காட்டுமிராண்டிகள்' என்று சொன்னவர் நம்மை அடக்கி ஆளுபவர்; அவர் நம்மையென்ன வாழ்த்தவா செய்வார்? வரலாறுகளைத் துணை வைத்து அரசியல் நிலைமைகளை விளக்கி விட்டுத்தான் நாம் கேட்கிறோம், திராவிடம்; அது அவருக்கு, காட்டுமிராண்டித்தனமாகத் தெரிகிறது.

"அரசியல் அனுபவமிக்க நண்பர்களைக் கேட்கிறேன்—எங்கட்குத் தரப்பட்டுள்ள தண்டனை போதாதென உயர் நீதி மன்றம் சென்றுள்ள ஆச்சாரியாரைக் கேட்கிறேன் — வெள்ளைக்காரன் காலத்திலே காங்கிரசாருக்குத் தரப்பட்ட மறியல் உரிமை கூட இப்போது எங்களிடமிருந்து பறிக்கப்படுவானேன்? உப்பு சத்தியாக்கிரகம் எங்கே? அன்னியத் துணி பகிஷ்கார மறியல் எங்கே? மது ஒழிப்பு மறியல் எங்கே? அதையெல்லாம் செய்ய உரிமை பெற்றிருந்த காங்கிரஸ் நண்பர்கள், இன்று எங்களிடமிருந்து அதைப் பறிப்பானேன்? அறநெறி வழுவா முறையான மறியல் உரிமையை மறுப்பானேன்? இதற்காகத்தான் உயர்நீதி மன்றத்திலே எங்கள் மீது வீசப்பட்ட 341-வது செக்ஷன் சரிதானா என்ற விளக்கம் பெற அப்பீல் செய்திருக்கிறோம்.

"நாங்கள் வெளியிலிருக்கும்போது, எங்கள் பேச்சை நாணயமானவர்கள்தான் கேட்கிறார்கள்; சிறைக்குள்ளே, கொலை செய்தவர்கள், கொள்ளையடித்தவர்கள் எல்லோரும் கேட்கிறார்கள். இந்த நிலைமை, அரசியலாருக்கு ஆபத்தானதாகும்.

"இந்த நேரத்தில், நான், நமது தோழர்களுக்குக் கூற ஆசைப்படுவதேல்லாம், முனைனக் காட்டிலும் நமக்குக் கட்டுப்பாடு அதிகம் வேண்டும்; நமது தோள் வலிமையிலே நமக்கு நம்பிக்கை யுண்டு; மாற்றாரைத்தான் பணிய வைக்கும் மரபினர் நாம்; எனவே, புலிகளாகிய நாம் எலிகள்மீது சீறி விழக்கூடாது.

"நமது போராட்டங்கள், நமது கொள்கைகளின் அடிப்படையில்தான் இருக்க முடியும்—நியாயமானவைதான் என்ற எண்ணம் நமக்குத்தான் இருக்கவேண்டும் — மாற்றுக் கட்சியினருக்கு அல்ல. நமது மனைவி நமக்குத்தான் அழகி

(தொடர்ச்சி 1-ம் கலம் பார்க்க)

கல்லக்குடி அறப் போர்

★

இன்று
141-வது நாள்

தூத்துக்குடி சதிவழக்கு நிதி

★

இதுவரை
சேர்ந்துள்ளது
ரூ. 5630-11-7

சேலம் மாவட்ட தி. மு. க. நிதிக்காக

6—12—1953 ஞாயிறு மாலை 6-30 மணிக்கு
சேலம் விக்டோரியாவில்
புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்
குழுவினரின்

இன்பக் கனவு

நாடகம் நடைபெறும்
எம். ஜி. சக்ரபாணி, எம். கே. முஸ்தபா,
என். எஸ். நாராயணன், ஜி. சகுந்தலா, சுலோசனா
மற்றும் பலர் நடிக்கின்றனர்
கழகத் தோழர்களின் கருத்துக்கு விருந்து!
நாடக ரசிகர்களுக்கு நல்லதோர் வாய்ப்பு!!
கட்டணம்: ரூ. 5, 3, 2, 1, அணா 8
அமைப்பாளர்கள், லீபஜார், சேலம்.

தமிழ்நாடெங்கும் தூத்துக்குடி வாரம்

★

தி. மு. கழகத் தலைமை நிலைய அறிக்கைக்கிணங்க, 'தூத்துக்குடி வாரம்' கொண்டாடி, அந்தக் கூட்டத்தில், "தூத்துக்குடி வழக்கை வாபஸ் வாங்கக் கோரியும், அதில் சம்பந்தப்பட்டுள்ள தூத்துக்குடி தோழர்களை விடுதலை செய்யுமாறு சென்னைப் பிரதம மந்திரியைக் கேட்டுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றி, அதை சென்னை முதல் அமைச்சர் ஆச்சாரியாருக்கு அனுப்பியும், தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் பெற்று; தூத்துக்குடி தோழர்களை விடுவிக்கக்கோரும் மனு ஒன்றை தயாரித்து, அதில் பொதுமக்களிடம் கையொப்பம் வாங்கி முதலமைச்சருக்கு அனுப்பியும் உள்ள கழகங்களின் பட்டியலும், நிகழ்ச்சியின் சுருக்கமும் கீழே தரப்பட்டுள்ளது. தீர்மானங்களும், கோரிக்கையும், கையொப்பம் திரட்டலும் ஒரே நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டவையானதால், தீர்மானங்களைத் தவிர்த்து, கூட்ட நிகழ்ச்சிகளை மட்டும் பிரசுரித்துள்ளோம்.

தொட்டியகோட்டாம்பட்டி

15—11—53ல், தி. மு. கழக கிளைக் கழகச் சார்பில், தோழர் கே. என். தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சிவராமன், எம். சதாசிவம் ஆகியோர் பேசியபின், தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி, தூத்துக்குடி சதிவழக்கு பற்றியும் மக்கள் உதவ வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும், இன்றைய ஆட்சியின் அவல நிலையை விளக்கியும் நீண்ட நேரம் விரிவுரையாற்றினார். தூத்துக்குடி தீர்மானமும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

ச. வி. நகரம்

21—11—53ல், நடைபெற்ற தி. மு. கழக அங்கத்தினர்கள் கூட்டத்தில், தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றியும், பொது மக்களிடம் கையெழுத்துக்கள் வாங்கியும் அரசியலாருக்கு அனுப்பப்பட்டது.

கிழப்பாவூர்

8—11—53ல், நடைபெற்ற தி. மு. கழக செயற்குழு கூட்டத்தில், தூத்துக்குடி தீர்மானமும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கோகூர்

7—11—53ல், தி. மு. கழகக் கிளையின் சார்பில், தோழர் பொ. தட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தொண்டைமான் நல்லூர்

9—11—53ல், தி. மு. கழகக் கிளையின் சார்பில், தூத்துக்குடி நாள் கூட்டம் தோழர் முகம்மது சுல்தான் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் எம். ரெத்தினம், த. காவேரி முதலியோர் பேசினர். தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

ஆறுமுகநேரி

15—11—53ல், தி. மு. கழக செயற்குழு கூட்டம் தோழர் இரா. ராசபாண்டியன் தலைமையில் நடைபெற்றது. தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

புதூர்

7—11—53ல், தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் அண்ணா திடலில் நடைபெற்றது. தோழர் எ. கோபால் தலைமை தாங்கினார். தோழர்கள் மு. நடேசன், எ. ராமன் ஆகியோர் பேசினர்.

கலையம்புத்தூர்

13—11—53ல், தி. மு. கழக சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் தேன்மொழி தலைமையில் தோழர்கள் ப. நாராயணன், செ. [illegible] முதலியோர் பேசினர்.

[illegible]ந்தை

1[illegible]—11—53ல், தி. மு. கழக செயற்குழு கூட்டம் தோழர் [illegible] தலைமையில் [illegible] நடைபெற்றது. அதுபோது, தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

காதக்கோட்டை

15—11—53ல், தி. மு. கழக சார்பில், தூத்துக்குடி நாள் பொதுக் கூட்டம் தோழர் கே. பி. சுந்தரம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. சின்னமுத்துசாமி, கே. கண்ணுசாமி, கே. ஜெகதீஸ், ஆர். பி. வடிவேல், சி. காளிமுத்து, கே. என். குப்புசாமி, கே. என். பொன்னுசாமி, கே. என். சடையப்பன், பி. கந்தசாமி, கே. கே. சுப்ரமணியம் மற்றும் பல தோழர்களும் பேசினர்.

கோவிலடி

6—11—53ல், கோவிலடி பகுத்தறிவு மன்றத்தின் சார்பில் செயலாளர் தோழர் ம. வில்சன் தலைமையில் நடைபெற்றபொதுக் கூட்டத்தில், தூத்துக்குடி நாள் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மரக்காணம்

5—11—53ல், நடைபெற்ற தி. மு. கழகச் செயற் குழுவில தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு முதல் மந்திரியாருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சிவகிரி

8—11—53ல், நகர தி. மு. கழகச் செயற் குழு கூட்டம் தோழர் மா. ராமசாமி தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தூத்துக்குடி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

சென்னை (1-வது வட்டம்)

தூத்துக்குடி வழக்கை வாபஸ் பெறச் செய்யும் மனுவில் 450 கையொப்பங்கள் வாங்கி முதலமைச்சர் முகவரிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

புகலூர்

16—11—53ல், தி. மு. கழகச் சார்பில், "தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கு" என்ற அறிக்கையில் 487 கையெழுத்துக்கள் வாங்கி அரசியலாருக்கு அனுப்பப்பட்டது.

துரப்பு வேலப்பாடி

2—11—53ல், தி. மு. கழகத்தின் சார்பில், தூத்துக்குடி வாரத்தை ஒட்டி, அறிக்கை ஒன்று தயாரித்து, அதில் ஏராளமான பொது மக்களிடம் கையொப்பம் வாங்கி; அரசியலருக்கு அனுப்பப்பட்டது.

உசிலம்பட்டி

15—11—53ல், தி. மு. கழகச் சார்பில், தூத்துக்குடி தினம் பி. கே. மாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் எஸ். எஸ். ராஜேந்திரன், எம். என். பால்ராஜ், உசிலைத்தம்பி, கு. ஜப்பிரகாசம் ஆகியோர் பேசினர்.

கிராப்பூர்

[illegible]—11—53-ல், தோழர் [illegible] தலைமையில், தூத்துக்குடி வாரத்தை ஒட்டி பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர்கள்: பி. கிருஷ்ணசாமி, டி. பி. அழகமுத்து. துறையூர் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் தோழர் ப. ஆராம்சாமி, பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., ஆகியோர் பேசினர்.

மருதன்வாழ்வு

20—11—53ல், தோழர் இராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் நடராசன், இராசபாண்டியன் ஆகியோர் தூத்துக்குடி நாள் பற்றி விரிவுரையாற்றினர்.

ஊத்துக்குளி

8—11—53ல், அர்ச்சுனா மன்றத்தின் செயற் குழுக் கூட்டம் தோழர் க. நடராச தலைமையில் கூடி, தூத்துக்குடி நாள் கொண்டாடப்பட்டது. தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஈரோடு

7—11—53ல், காரை வாய்க்கால் மைதானத்தில் தோழர் இரா. பெருமாள் தலைமையில் தூத்துக்குடி வாரப் பொதுக் கூட்டம்நடைபெற்றது. தோழர்கள் ஈ. ஏ. மதார்சா, எஸ். அப்பாவு ஆகியோர் தூத்துக்குடி வாரம் குறித்து பேசினர். பின்னர், தோழர் எஸ். ஆர். சந்தானம் தூத்துக்குடி சதி வழக்கை வாபஸ் வாங்கி, 96 தோழர்களையும் விடுதலை செய்யக் கோரும் தீர்மானத்தை பிரேரேபித்தார்.

தீர்மானத்தை ஆதரித்தும், நாட்டின் தற்கால நிலை குறித்தும், ஆச்சாரியார் சர்க்காரின் தவறான போக்கு குறித்தும், தி. மு. கழகத்தின் நடவடிக்கைகள் குறித்தும் காஞ்சில் தோழர் கி. மனோகரன் பேசினார்.

திருப்பத்தூர் (இ. மா.)

8—11—53ல், நடைபெற்ற தி. மு. கழகச் செயற் குழு கூட்டத்தில், தூத்துக்குடி நாள் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது என செயத்தி அறிவிக்கிறார்.

துணித் தொழிலில் மந்த நிலைமை!

பம்பாய், நவ. 30—

"யுத்தம் நடந்தபோது, துணித் தொழில் பிரமாதமாக இருந்தது; 1939-ல், ஏற்றுமதி 97,70,00 000 கெஜமாக இருந்தது; 1950-ல் 107,20,00,000 கெஜமாக உயர்ந்தது இதனால், 1950-ல், ரு 89,00,00,000 வருமானம் கிடைத்தது

சென்ற மூன்று ஆண்டுகளாக ஏற்றுமதி குறைய ஆரம்பித்து விட்டது. இவ்வாண்டு அக்டோபர் வரையில் 46 30,00,000 கெஜம்தான் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.

சிறைமீண்ட தோழர்கட்கு பாராட்டுக் கூட்டம்

கோடம்பாக்கம், நவ. 25—

சென்னை கோடம்பாக்கம், 35-வது வட்டம் தி. மு. கழகக் கட்டிடத்தில் சிறை சென்று மீண்ட தோழர்கள் க. இளங்கோவன், இரா. இளங்கோசன அ. செ. க. துரைக்கண்ணு ஆகிய மூன்று தோழர்களையும்பாராட்ட ஓர் பாராட்டுக்கூட்டம் தோழர் மு. புரட்சிமணி தலைமையில் 22—11—53ல், நடைபெற்றது அவ்வமயம் மீர்சாகிப்பேட்டை தி. மு. கழகம்,இராயப்பேட்டை தி. மு. கழகம், சிந்தாதிரிப்பேட்டை தி. மு. கழகம், கோடம்பாக்கம் தி. மு. கழகம், வ. உ. சி. மன்றம், கலைவளர் கழகம் ஆகியவைகளின் சார்பாக சிறைசென்று மீண்ட தோழர்களைப் பாராட்டி தோழர்கள் இரா. [illegible], அ. கி. செம்பியமொழி, சா. கணேசன், மா. தி. இராமலிங்கம், கிருட்டினமூர்த்தி, வெங்கடாசலம், செ. கிருட்டினமூர்த்தி, சரவணன், சோ. இளவரசு ஆகியோர் பேசினர் சிறைமீண்ட தோழர்கள் மூவரும் சிறை அனுபவத்தைப் பற்றி விளக்கிப் பேசினர்.முடிவில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆண்டு விழாவும் பாராட்டுக் கூட்டமும்

காஞ்சி, நவ. 25—

22—11—53ல், பிள்ளையார் பாளையம் திருவேகம்பன் தெருவில், வேலாயுதம் படிப்பகத்தின் ஆண்டு விழாவும், சிறை சென்று திரும்பிய காஞ்சிதோழர்களான இரா. கன்னியப்பன், இரா. வெங்கடேசன்,கு கன்னியப்பன், வெ.முருகேசன், கு. அண்ணாமலை. த. சண்முகம், ரா. சுப்ரமணியன், சா. முருகேசன், கு. ஷண்முகம். ஜி. ராஜாராம், ஜி. ஜெயராமன், கோவிந்தசாமி, வீரராகவன், கன்னியப்பன, கே. என். சிசேகர், எம் துரைசாமி, டி. டி கிருட்டினன், சி. ஆர். வெள்ளையப்பன், கிருட்டிணன் ஆகியவர்களுக்குப் பாராட்டுக் கூட்டம் தோழர் சி. வி. எம். அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது தலைவர் முன்னுரையில் ஆட்சியாளர்களால் நமக்கு இழைக்கப்படும் அநீதியைக் கண்டித்தும், பொதுமக்களுக்கு அவர்கள் இழைக்கும் அன்பங்களைக் குறித்தும் பேசினார்.

சிறை சென்ற தோழர்களுக்கு நகர தி.மு.கழக சார்பில் வாழ்த்தும், வேலாயுதம் படிப்பகத்தின் சார்பில் மலர் மாலைகளும் வாழ்த்தும் வாசித்தளிக்கப்பட்டது.

அடுத்து கே. டி. எஸ். மணி அவர்கள் தூத்துக்குடி தோழர்கள்மீது தொடுக்கப்பட்டிருக்கும் வழக்கு குறித்து விவரித்துப் பேசி, தூத்துக்குடி சதிவழக்கு நிதிக்கு எல்லோரும் நிதி வழங்க வேண்டுமென்று பொதுமக்களைக் கேட்டுக்கொண்டார்.

ஆத்தூர் வட்ட தி. மு. கழக செயற்குழு தேர்தல்

சேலம், நவ. 25—

22—11—53-ல், கழகப் பணிமனையில் தோழர் எம். பி சுப்ரமண்யம், பி. ஏ., எம். எல். ஏ., தலைமையில் ஆத்தூர் வட்ட செயலாளர்கள் கூட்டத்தில், வட்டக்குழு அமைப்பு நடைபெற்றது.

அதுபோது, என். கே நல்லவாண்டு செயலாளராகவும், வி எம். சன்னியாசி துணைச் செயலாளராகவும், கே. நாராயணசாமி பொருளாளராகவும். எஸ். அப்பாவு மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவரின் பேச்சுக்குப் பின், கழகப் பிரசாரத்தைப் பலப்படுத்தவும், கிளைகளை நிறுவவும், ஆக்க வேலைகளைக் கவனிக்கவும், முழுநேர ஊழியர்களாக தோழர்கள்: ஆ. செ. அன்பழகன், என். கே. இராசு ஆகியோரை நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

ஹோட்டல் தொழிலாளர் சங்கம்

தூத்துக்குடி, நவ. 23—

15—11—53ல், புதூர் மைதானத்தில், தோழர் வே. ஏகநாதன் தலைமையில், மேற்படி சங்கக் கூட்டம் நடைபெற்றது. தோழர் அருணா பண் பாடியபின், தோழர் என். இராசமாணிக்கம் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார். பின்னர், தூத்துக்குடி நிர்ணயம், ஓட்டல் தொழிலாளர் குறைகள் உட்பட 11-தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை!

கோலாலம்பூர், நவ 30—

மலேயாவில் 1945-ல், அவசர நிலை ஏற்பட்டதிலிருந்து சென்ற மாதக் கடைசிவரையில் 4,557 கம்யூனிஸ்டு பயங்கரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பெற்றது காயமடைந்தவர்கள் 2,181; சரணடைந்தவர்கள் 1,214.

கொல்லப்பட்ட சிவிலியன்கள் 2,238; காணாமற்போனவர்கள் 644 பேர். —ரேபன்

எல்லைக் கமிஷன் நியமனம்

சீக்கிரமே அறிவிக்கப்படும்!

புதுடில்லி, நவ. 30—

எல்லைக்கமிஷன் நியமனம் பற்றிய அறிவிப்பை இந்தியப் பிரதமர் பண்டித நேரு, பார்லிமெண்டில், டிசம்பர் இரண்டாவது வாரத்தில் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கமிஷனில் ஐந்து உறுப்பினர்கள் இருப்பார்கள். பொருளாதாரம், மொழி நிர்வாக சௌகரியம் இவைகளைபொட்டி இந்தியாவில் ராஜ்யங்களை எப்படிப்பிரிக்கலாம் என்பதுகுறித்து பரிசீலனை செய்யப்படும். பொருளாதார நிர்வாகத்துறை நிபுணர்களாக உள்ளவர்களை இக்கமிஷனில் மெம்பர்களாக நியமிக்கப்படுவர்.

இந்த எல்லைக்கமிஷனுக்குட்பட்டு பிரதேசவாரி கமிட்டிகள் பல இருக்கும். அக்கமிட்டிகள், அந்தந்த ராஜ்யங்களின் பூர்வீக சரித்திரம், அதன் முன்புள்ள பிரச்னைகள் முதலிய தகவல்களை எல்லாம் சேகரித்து கமிஷன் சமர்ப்பிக்கும்.

பறிமுதல் செய்யப்பட்ட சரக்குகள்

புதுடில்லி, நவ 30—

இந்தியாவுக்குள் அனுமதியின்றி இறக்குமதி செய்ததற்காக, 1952—53 ம் ஆண்டில், சுமார் 1,95 93,300 ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களும், 1953—54-ம் ஆண்டின் முதல் ஆறு மாதகாலத்தில் சுமார் 1,35,67,940 ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களும், சுங்க அதிகாரிகளால் பறிமுதல் செய்யப்பட்டன. மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி யொன்றுக்குப் பதிலளிக்கையில் கூறப்பட்டது.

இவ்வாறு சட்டத்தை மீறியவர்கள் மீது, 1952—53-ம் ஆண்டிலும், 1953—54-ம் ஆண்டின் முதல் ஆறு மாதகாலத்திலும் விதிக்கப்பட்ட மொத்த அபராதத் தொகை, முறையே 24,11,380 ரூபாயும், 2,66,360 ரூபாயும் ஆகுமென்றும், இத்தொகையில் முறையே 4,80,460 ரூபாயும், 1,07,290 ரூபாயும் இதுவரை வசூலிக்கப்பட்டிருக்கின்றன என்றும், பாக்கியுள்ள தொகையை வசூலிப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. பரிசீலனை காலங்களில், இவை சம்பந்தமாக முறையே 163 வழக்குகளும், 110 வழக்குகளும் தொடரப்பட்டனவாம்.

திருத்தம்

27—11—53 வெள்ளியன்று 'நம் நாடு' இதழில் 'வீட்டு வாடகையை உயர்த்தாதே' என்ற தலைப்பில் வந்த செய்தியில், 'மாஜி இராணுவத் தொழிலாளர் சங்கம்' என்பதையும் சேர்த்து வாசித்துக் கொள்ள வேண்டுகிறோம்.

பிறப்பு

41-வது வட்ட தோழர் ஆர். வி. மெய்யப்பன் அவர்கள் மனைவியார் காந்திமதி அம்மைக்கு (27—11—53) வெள்ளிக்கிழமை ஆண்குழந்தை பிறந்தது. தாயும் சேயும் நலம். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிக்கப்பட்டது—நன்றியுடையது. பொறுப்பாளர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. செழியன், எம். ஏ. அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று ([illegible] நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இ. வி. கே. சம்பத் [illegible]